# வெற்றிக்கு வழி குழுமம் & திறன்வளர் ஆசிரியர் மன்றம்

## *10ஆம் வகுப்பு மாதிரி பொதுத்தேர்வுக்கான விடைக்குறிப்பு 2023-2024*

## தமிழ்

### விடைத்தாள் மதிப்பீட்டிற்கான வழிகாட்டுக் குறிப்புகள்

மாதிரிப்பொதுத்தேர்வு விடைத்தாள்களை மதிப்பீடு செய்ய முன்வந்துள்ள தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மாதிரிப் பொதுத்தேர்வு விடைத்தாள்களை அரசுப் பொதுத்தேர்வு விடைத்தாள்களை மதிப்பிடுவதைப் போன்றே சிறப்பாக, விரைவாக, குறைபாடுகளுக்கு இடமின்றி மதிப்பிட்டுத் தருமாறு உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

★ விடைக்குறிப்பினைப் பல்வேறு ஆசிரியர்கள் சரிபார்த்த பிறகே இறுதி செய்துள்ளோம். அதன்படியே மதிப்பீடு செய்யுங்கள். ஏதேனும் தவறுகள் உங்களுக்குத் தென்பட்டால் 7397774508 என்ற எண்ணில் தொடர்புகொண்டு கலந்தாலோசித்த பிறகே விடை குறிப்பில் திருத்தம் செய்யவேண்டுமே தவிர நீங்களாகத் திருத்தம் செய்யவேண்டாம். தமிழ்நாடு முழுவதும் பொதுவான தேர்வு என்பதால் மதிப்பீட்டுப் பணிகளில் வேறுபாடுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே இதனைக் கூறுகிறோம்.

★ விடைத்தாள்களைச் சிவப்பு மை கொண்டு மட்டுமே மதிப்பிட வேண்டும். வேறு வண்ணங்களில் மதிப்பிடக்கூடாது.

★ தவறுகளை வட்டமிட்டு அல்லது அடிக்கோடிட்டுக் காட்டி, மாணவர்கள் எழுதியிருக்கும் விடைகளின் தரத்திற்கேற்றவாறு மதிப்பெண்களைக் கொடுக்கவும்.

★ விடைத்தாளின் வலதுபுற கோட்டுக்குப் பிறகு உள்ள இடத்தில் ஒவ்வொரு வினாவிற்கும் நேராக உங்கள் மதிப்பெண்களை எழுதவும். பக்கவாரியான கூடுதல்களை அந்தந்தப் பக்கங்களின் கீழே எழுதவும்.

★ விடைத்தாளின் முன்பக்கத்திலுள்ள 'வினா எண் வாரியான கூடுதல்கள்' 'பக்கவாரியான கூடுதல்கள்' போன்றவற்றை நிரப்பி, அவற்றைக் கூட்டி, இவ்விரு பகுதிகளின் மொத்த மதிப்பெண்ணும் ஒன்றாக வருகிறதா என சரிபார்த்தபின் மொத்த மதிப்பெண்ணை விடைத்தாளின் வலது மேல் மூலையில் தெளிவாக எழுதவும்.

★ திருத்திய விடைதாள்களை மாதிரித் தேர்வுப் பொறுப்பாளரிடம் வரிசைப்படி அடுக்கி கட்டிக் கொடுத்துவிடுங்கள்.

**வினாக்களுக்கு மதிப்பெண் வழங்குவதில் நினைவில் கொள்ள வேண்டியவை :**

★ கட்டாய வினாவிற்கு (compulsory Question) பதிலாக வேறு வினாவிற்கு விடையளித்திருந்தால் அதற்குக் கட்டாயம் மதிப்பெண் வழங்கக் கூடாது.

★ வினா எண் எழுதவில்லை எனில் மதிப்பெண் வழங்காதீர்கள்.

★ ஒரு மதிப்பெண் வினாவிற்கு வினா எண், விடை மற்றும் அதன் குறியீடு ஆகிய மூன்றுமே சரியாக இருந்தால் மட்டுமே முழு மதிப்பெண் வழங்க வேண்டும்.

★ சில கேள்விகளுக்கு Mark Allocation வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மதிப்பெண் வழங்க வேண்டும்.

★ ஒன்றுக்கும் மேற்பட்ட விடைகளுடைய வினாக்கள், பாடம் சார்ந்த பத்திவினாக்கள், சுயமாக எழுதக்கூடிய வினாக்கள் போன்றவற்றிற்கு விடைக்குறிப்பில் இல்லாத பொருத்தமான விடைகளை மாணவர்கள் எழுதி இருப்பின் அதற்கேற்ப மதிப்பெண் வழங்கலாம். ஏதேனும் சந்தேகம் இருப்பின் மேற்கூறிய பொறுப்பாளரைத் தொடர்புகொள்ளவும்.

ஆசிரியர் மாணவர் சார்ந்த கல்விப்பணியில் எங்களோடு இணைந்துள்ள உங்களுக்கு, உங்களது கல்விப்பணி என்றென்றும் சிறந்து விளங்க வாழ்த்துகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

### பகுதி – 1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $15 \times 1 = 15$

| வினா எண் | விடைக் குறியீடு | விடைகள் | அலகுகள் | மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1. | (ஈ) | வானத்தையும் பேரொலியையும் | 4 | **1** |
| 2. | (ஈ) | அதியன்; பெருஞ்சாத்தன் | 8 | **1** |
| 3. | (ஆ) | இனமொழி விடை | 5 | **1** |
| 4. | (ஈ) | வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும் | 1 | **1** |
| 5. | (ஆ) | வேற்றுமை உருபு | 3 | **1** |
| 6. | (அ) | மிளகு | 7 | **1** |
| 7. | (ஆ) | 3, 4, 1, 2 | 6 | **1** |
| 8. | (ஈ) | செய்தி 1, 3 ஆகியன சரி | 2 | **1** |
| 9. | (இ) | காடு, வாட | 9 | **1** |
| 10. | (ஈ) | கால வழுவமைதி | 4 | **1** |
| 11. | (ஆ) | வலிமையை நிலைநாட்டல் | 7 | **1** |
| 12. | (அ) | முல்லைப்பாட்டு | 2 | **1** |
| 13. | (ஈ) | அகன்ற உலகம் | 2 | **1** |
| 14. | (இ) | உரிச்சொற்றொடர் | 2 | **1** |
| 15. | (ஆ) | நப்பூதனார் | 2 | **1** |

# வெற்றிக்கு வழி குழுமம் & திறன்வளர் ஆசிரியர் மன்றம்
## *10ஆம் வகுப்பு மாதிரி பொதுத்தேர்வுக்கான விடைக்குறிப்பு 2023-2024*
## தமிழ்

### பகுதி – II (மதிப்பெண்கள் - 18)

#### பிரிவு - 1

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 21 கட்டாய வினா.** $4 \times 2 = 8$
**கட்டாய வினாவிற்கு பதிலாக மாற்று வினாவிற்கு பதிலளித்தால் மதிப்பெண் வழங்கக்கூடாது.**

| வி.எண் | விடைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 16. | ❖ இறடி - தினை, பொம்மல் - சோறு;<br>❖ பொருள்: **"தினைச் சோற்றை உணவாகப் பெறுவீர்கள்"** **[செ-2-அ-3]** | 2 |
| 17. | அ) இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் **எந்த** ஆண்டு மிகவும் சிறப்புடைய ஆண்டாக கருதப்படுகிறது?<br>ஆ) ஒரு நாட்டின் தவப்பயனாக அமைபவை **யாவை**? **[உ - 7]**<br>*(பொருத்தமான வினா எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | 2 |
| 18. | ❖ **கி.பி. முதல் நூற்றாண்டில்** வாழ்ந்த **கிரேக்க மாலுமி 'ஹிப்பாலஸ்' பருவக்காற்றின்** உதவியினால் நடுக்கடல் வழியாக **முசிறித் துறைமுகத்திற்குப்** புதிய வழியைக் கண்டுபிடித்தார். **[உ - 2]**<br>❖ **விரைவான பயணத்திற்கு** இப்புதிய வழி உதவியால் **யவனக் கப்பல்கள்** சேரர்களின் முசிறித் துறைமுகத்திற்கு **அதிகமாக** வந்தன.<br>❖ யவனர், இப்பருவக்காற்றிற்கு அதைக் **கண்டுபிடித்த ஹிப்பாலஸ்** பெயரையே சூட்டினார்கள். | 2 |
| 19. | **தொடர்**: *"எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை என்ப தறிந்து ஏகுமென் சாலை"* — **காரணம்**: என் வழியில் எவை தீமை, எவை நன்மை என்பதை அறிவேன் என்னும் இவ்வரிகள் எனக்கு பிடித்தவையாகும். **[செ-2-அ- 8]**<br>**தொடர்**: *"தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்; தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்"* — **காரணம்**: தலைவர் மாறலாம், ஆட்சி மாறலாம், ஆனால் மாற்றம் என்னும் தத்துவம் மட்டுமே நிலையானது என்று கூறியது மிகவும் அருமை.<br>*(பொருத்தமான இரண்டு கருத்துகளை சரியாக எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | 2 |
| 20. | ❖ சில நேரங்களில் சில மனிதர்கள் ❖ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்<br>❖ உன்னைப்போல் ஒருவன் ❖ யாருக்காக அழுதான் **[உ - 9]**<br>*(எவையேனும் இரண்டு எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | 2 |
| 21. | பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்<br>கண்ணோட்டம் இல்லாத கண். **[வா - 3]** | 2 |

#### பிரிவு - 2

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

| வி.எண் | விடைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 22. | ❖ **தண்ணீர் குடி** - தண்ணீரைக் குடி - இரண்டாம் வேற்றுமைத் தொகை **[இ- 2]**<br>❖ **தயிர்க்குடம்**-தயிரை உடைய குடம் - 2ம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை | 2 |
| 23. | ❖ **பொழிந்த = பொழி + த்(ந்) + த் + அ**<br>பொழி - பகுதி; த் - சந்தி, 'ந்' ஆனது விகாரம்<br>த் - இறந்தகால இடைநிலை; அ - பெயரெச்ச விகுதி **[இ - 3]** | 2 |
| 24. | (அ) **சிலை**யைத் **திரைச்சீலை**யால் மறைத்திருக்கிறார்கள்.<br>(ஆ) என்னை **விடு** என்று சொல்லி **வீடு** சென்றான். **[மொ.வி - 3]**<br>*(பொருத்தமாக விடை எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | 2 |
| 25. | **முதற்பொருள்** - நிலமும் பொழுதும் ◆ **நிலம்** - காடு<br>◆ **பொழுது** : **பெரும்பொழுது** - கார்காலம் (மழைக்காலம்), **சிறுபொழுது** - மாலை<br>◆ **கருப்பொருள்** : உணவு - வரகு **[இ - 6]** | 2 |
| 26. | ◆ Land breeze - நிலக்காற்று ◆ Intellectual - அறிவாளர் **[மொ.வி – 2, 5]** | 2 |
| | **செவிமாற்றுத் திறனாளர்களுக்கான வினா** **[மொ.வி - 8]**<br>(அ) கற்பனை செய்தல் -படிக்காமல் தேர்ச்சி பெறலாம் என **மனக்கோட்டை** கட்டக்கூடாது.<br>(ஆ) முழுக்கவனத்துடன்- பெற்றோர்கள் குழந்தைகளைக் **கண்ணும் கருத்துமாக**ப் பாதுகாத்தனர்.<br>*(பொருத்தமாக விடை எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | 2 |
| 27. | ◆ வியாழக்கிழமை 23 - **உ௩** ◆ சனிக்கிழமை 25 - **உரு** **[மொ.வி - 9]** | 2 |
| 28. | **"**மலை என்னை அடிக்கடி அழைக்கும். மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன். மனம் அமைதி எய்தும்**"** **[மொ.ப - 1]** | 2 |

## பகுதி – III (மதிப்பெண்கள் - 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** **2 × 3 = 6**

| வி.எண் | விடைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 29. | **திண்ணை:** **[உ - 3]**<br>❖ புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் **திண்ணையும் திண்டும்** அமைத்தனர்.<br>❖ இன்று வீட்டுக்குத் **திண்ணை வைத்து யாரும் கட்டுவதில்லை.**<br>**இல்ல விழாக்கள்:**<br>❖ முன்னர் இல்ல விழாக்களைத் **தங்கள் இல்லத்திலேயே** நடத்தி விருந்தினர்களுக்கு விருந்தளித்தனர்.<br>❖ இக்காலத்தில் **மண்டபங்களுக்கு**, இல்ல விழாக்கள் இடம் மாறிவிட்டன.<br>**வரவேற்பு:**<br>❖ இல்லவிழா நாள்களில் அப்பகுதி வாழ் மக்களும் சேர்ந்து விருந்தினர்களுக்கு உதவினர்.<br>❖ இன்று திருமணக் கூடங்களில் விருந்தினரை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும்வரை திருமண ஏற்பாட்டாளர்கள் செய்கின்றனர்.<br>**விருந்தினர்களை ஏற்கும் நிலை:**<br>❖ முன்னர் புதியதாக வருவோர்களை விருந்தினராக ஏற்றனர்.<br>❖ இன்று அறிமுகமில்லாத புதியவர்களை விருந்தினர்களாக ஏற்பது இல்லை. உற்றார், உறவினர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்கின்றனர்.<br>*(பொருத்தமாக விடை எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | **3** |
| 30. | (அ) செயற்கை நுண்ணறிவு: **ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு.**<br>(ஆ) **செயற்கை நுண்ணறிவு** பொதிந்த இயந்திரங்களுக்கு ஓய்வு தேவையில்லை.<br>(இ) • **பார்த்தல், கேட்டல், புரிந்துகொள்ளுதல்** • **தானாகவே கற்றுக்கொள்ளுதல்.**<br>• **மனிதர்களைப்போல தானே முடிவெடுக்கும் திறன்.** **[உ - 4]** | **3** |
| 31. | ❖ **போலச் செய்தல்** என்ற பண்பினை அடிப்படையாகக் கொண்டது. **[உ - 6]**<br>❖ இது **மரத்தாலான குதிரை வடிவுள்ள கூட்டை** உடம்பில் சுமந்து ஆடும் ஆட்டம்.<br>❖ இதற்கு **பாடல்கள் தேவையில்லை. நையாண்டி மேளமும் நாதசுரமும்** இசைக்கப்படுகின்றன.<br>❖ இது **மராட்டியர்** காலத்தில் **தஞ்சைக்கு** வந்ததாகக் கூறப்படுகிறது.<br>❖ **அரசன், அரசி வேடமிட்டு** ஆடப்படும் இவ்வாட்டம் **புரவி ஆட்டம், புரவி நாட்டியம்** என்றும், **இராஜஸ்தானில்,''கச்சிகொடி''**என்றும்,**கேரளத்தில்''குதிரைக்களி''**என்றும் அழைக்கப்படுகிறது. | **3** |

### பிரிவு - 2

**எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி. வினா எண் 34 கட்டாய வினா.** **2 × 3 = 6**
**கட்டாய வினாவிற்கு பதிலாக மாற்று வினாவிற்கு பதிலளித்தால் மதிப்பெண் வழங்கக்கூடாது.**

| வி.எண் | விடைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 32. | ❖ முதல் மழை விழுந்ததும், **உழுவதற்கேற்ப மேல்மண்** பதமாகிவிட்டது.<br>❖ வானில் **வெள்ளி முளைக்கும் முன்பே**, உழவர்கள் காளைகளை ஓட்டி சென்றனர்.<br>❖ **மாடுகளை ஏரில் பூட்டி, கொழுவை நன்கு அழுத்தி** நிலத்தை உழுதனர்.<br>❖ மழை பொழிந்ததால், **நிலம் சிலிர்த்து நாற்று நிமிர்ந்து** நிற்கும்.<br>❖ கவலையில்லாமல், **கிழக்கில் தோன்றும் சூரியன்** கதிர்கள் பரப்பும் வேளையில் நிலத்தினை உழுவதற்காக **கலப்பையில் இருப்பைப் பொருத்தினர்.** **[செ - 1-அ-7]** | **3** |
| 33. | ❖ கருணையன் வளர்ந்து **பெரிய மனிதனாவதற்கு முன்பாகவே** அவனுடைய **தாய் எலிசபெத் இறந்து போனார்.**<br>❖ அதனால் **இளம்பயிர் முற்றி நெல்மணி ஆகும் முன்னர் மழையில்லாமல் வாடிக்** காய்வது போல அவன் வாடுகிறான்.<br>❖ அதனை **'காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்'** என்ற உவமையால் வீரமாமுனிவர் உணர்த்துகிறார். **[செ-2-அ-9]** | **3** |
| 34. | (அ) வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்<br>மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்<br>மீளாத் துயர்தரினும் வித்துவக் கோட்டம்மா! நீ<br>ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. **(அல்லது)** **[செ-1-அ-4]**<br>(ஆ) தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்<br>கொண்டல்கண் முழவி னேங்கக் குவளை கண் விழித்து நோக்கத்<br>தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்<br>வண்டுக ளினிது மருதம்வீற் றிருக்கு மாதோ. **[செ-3-அ-6]** | **3** |

## பிரிவு – 3

**எவையேனும் 2 வினாக்களுக்கு விடையளி.** $2 \times 3 = 6$

| வி.எண் | விடைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 35. | 1. நிறைத்**திருந்தது (நிறைத்தது)** – *கால வழுவமைதி*<br>2. வாழைத்**தோப்பு (தோட்டம்)** – *மரபு வழுவமைதி*<br>3. **குட்டி**யுடன் மாடு **(கன்று)** – *மரபு வழுவமைதி*<br>4. இலச்சுமி கூப்பிடுகி**றாள் (கூப்பிடுகிறது)** – *திணை வழுவமைதி*<br>5. இதோ சென்று**விட்டேன் (சென்று விடுகிறேன்)** – *கால வழுவமைதி*<br>6. துள்ளிய **குட்டி**யை **(கன்று)** – *மரபு வழுவமைதி*<br>7. **என்னடா** விளையாடவேண்டுமா? **(மாட்டை குறிக்கிறது)** – *திணை வழுவமைதி*<br>8. நீயும் **இவனும்** விளையாடுங்கள் **(இதனுடன்)** – *திணை வழுவமைதி*<br>9. தொட்டியிலிருந்த நீரைக்குடித்**தாள் (குடித்தது)** – *திணை வழுவமைதி*<br>*(எவையேனும் மூன்று எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* **[இ - 4]** | 3 |
| 36. | ❖ **அணியின் பெயர்** : நிரல்நிறை அணி<br>❖ **அணி பிரிப்பு** : நிரல் (வரிசை) + நிறை (நிறுத்தல்)<br>❖ **அணிஇலக்கணம் :**சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வதே நிரல் நிறை அணி எனப்படும்.<br>❖ **அணிப் பொருத்தம்** : இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைப்படக் கூறியுள்ளதால் இது நிரல்நிறை அணியாகும். **[இ - 9]** | 3 |
| 37. | (அட்டவணை கீழே)<br>இக்குறட்பா **'பிறப்பு'** என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது. **[இ - 8]** | 3 |

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| குற் / றம் | நேர் நேர் | தேமா |
| இல / னாய்க் | நிரை நேர் | புளிமா |
| குடி / செய் / து | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| வாழ் / வா / னைச் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| சுற் / றமாச் | நேர் நிரை | கூவிளம் |
| சுற் / றும் | நேர் நேர் | தேமா |
| உலகு | நிரைபு | பிறப்பு |

## பகுதி – IV (மதிப்பெண்கள் - 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $5 \times 5 = 25$

**38. (அ)** — மதிப்பெண்: 5

| ஒப்பீடு | சுந்தரனார் | பெருஞ்சித்திரனார் |
|---|---|---|
| **தமிழின் பிறப்பு** | **கடலெனும் ஆடை உடுத்திய நிலமெனும் பெண்**தான் தமிழ். | **குமரிக்கண்டத்தில்** மண்ணுலகம் போற்ற அரசாண்ட **பேரரசு** தமிழ் ஆகும். |
| **தமிழ்த் தாயின் பெருமை** | தமிழ்த்தாயின் முகம் - பாரத கண்டம் பிறை போன்ற நெற்றி-தக்காணப்பகுதி நறுமணமிக்கப் பொட்டு - தமிழகம் | தமிழ்அன்னை - பாண்டியனின் மகள், திருக்குறளின் பெருமைக்குரியள், உலகம் போற்றும் இலக்கியங்களைத் தந்தவள். |
| **உலகெங்கும் நிறைந்த மொழி** | தமிழ்த்தாயின் **நெற்றித் திலகத்தின் மணம்** போன்று தமிழ் மொழி எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்றது. | **வேற்றுமொழியார் புகழ்ந்துரைக்கும்** அளவிற்கு உலகின் எல்லாத் திசைகளிலும் உயிர்ப்போடு விளங்குகிறது. **[செ-1அ-1]** |
| **தமிழ் வாழ்க!** | இளமையான தமிழ்மொழியே, உன் **சிறப்பான திறமையை** வியந்து **எங்கள் செயல்களை மறந்து** உன்னை வாழ்த்துகிறோம். | **வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச்** சிறகசைத்துப் பாடுவது போன்று, உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம். |

*(பாடல்வரிகளுடன் பொருத்தமாக விடை எழுதி இருந்தால் முழு மதிப்பெண் வழங்கலாம்.)*

| | | |
|---|---|---|
| 38. (ஆ) | **இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வு:** **[செ-2-அ-5]**<br>❖ மன்னரின் அவையில் கவிதை படித்த இடைக்காடனாரை பாண்டிய மன்னன் அவமதித்தல்.<br>❖ மன்னனின் செயலை இறைவனிடம் முறையிட்டல்.<br>❖ இறைவன் இடைக்காடனாருக்காக கோவிலைவிட்டு நீங்குதல்.<br>❖ இறைவனிடம் மன்னன் வேண்டுதல்.<br>❖ தன் பிழையை உணர்ந்து மன்னன் புலவருக்கு சிறப்புச் செய்தல். | 5 |
| 39. (அ) | **கடிதம் எழுதுதல்**<br>❖ முகவரி - 1 மதிப்பெண்<br>❖ விளித்தல் - ½ மதிப்பெண்<br>❖ கடிதச்செய்தி - 2 மதிப்பெண்கள்<br>❖ இப்படிக்கு - ½ மதிப்பெண்<br>❖ உறைமேல் முகவரி - 1 மதிப்பெண் **[மொ.ஆ.-2]** | 5 |
| 39. (ஆ) | **கடிதம் எழுதுதல்**<br>❖ அனுப்புநர் - ½ மதிப்பெண்<br>❖ பெறுநர் - ½ மதிப்பெண்<br>❖ விளித்தல், பொருள் - ½ மதிப்பெண்<br>❖ கடிதச்செய்தி - 2 மதிப்பெண்கள்<br>❖ நாள் & இடம் - ½ மதிப்பெண்<br>❖ உறைமேல் முகவரி - 1 மதிப்பெண் **[மொ.ஆ.-7]** | 5 |
| 40. | **படம் உணர்த்தும் கருத்துகள்** **[அ - 9]**<br>*(காட்சிக்கு ஏற்ற பொருத்தமான கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | 5 |
| 41. | **மேல்நிலை வகுப்பிற்கான படிவம் நிரப்புதல்** **[மொ.ஆ.-9]**<br>*(படிவத்தில் அனைத்து விவரங்களும் சரியாக நிரப்பி இருந்தால் முழுமதிப்பெண் வழங்கலாம்.)* | 5 |
| 42. (அ) | (see table below)<br>*(இதுபோல் பொருத்தமாக எழுதி இருந்தால் முழுமதிப்பெண் வழங்கலாம்.)* **[மொ.வி.-8]** | 5 |
| 42. (ஆ) | **கூத்து :**<br>தெருக்கூத்து என்பது, அதனுடைய பெயர் குறிப்பிடுவது போல தெருக்களில் நிகழ்த்தப்படும் ஒரு புகழ் பெற்ற நாடகக்கலையாகும். இது கிராமப்புற கலைஞர்களால் நடத்தப்படுகிறது. இதன் கதைகள் இராமாயணம், மகாபாரதம் மேலும் பிற புராண இதிகாசங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன. இந்த நாடகங்களில் உள்ள உரையாடல்களுடன் கூடிய அதிகமான பாடல்கள் நிகழ்விடத்திலேயே அதன் கலைஞர்களால் மெருகேற்றப்படுகின்றன. பதினைந்து முதல் இருபது கலைஞர்கள் வரை ஒரு சிறிய இசைக்குழுவோடு இணைந்து உருவாவதுதான் தெருக்கூத்து குழுவாகும். இசைக்குழுவில் பாடகர் இருந்தபோதிலும் கூத்துக் கலைஞர்கள் தங்கள் சொந்தக் குரலிலேயே பாடுவார்கள். மிகுந்த எடையுள்ள பளபளக்கும் வண்ண ஆடைகள் மற்றும் பிரகாசமான ஒப்பனைகளைத் தாங்களாகவே செய்து கொள்வார்கள். கூத்து, கிராமப்புறங்களில் மிகவும் பிரபலமானது. **[மொ.ஆ.-6]** | 5 |
| | **செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**<br>(i) மீண்டும் மீண்டும்<br>(ii) தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது.<br>(iii) பெய்மழை<br>(iv) புவியின் பெருவெடிப்புக்கொள்கை<br>(v) நிலம், நீர். நெருப்பு, காற்று, வானம் **[மொ.ஆ.-4]** | 5 |

42. (அ)

| நாம் செய்யவேண்டுவன (அறங்கள்) | அறங்கள் தரும் நன்மைகள் |
|---|---|
| **நல்ல சொற்களைப்** பேசுதல். | **நல்ல நண்பர்களைப்** பெறலாம்; |
| **குறை பேசாதிருத்தல்.** | தேவையற்ற **சண்டை, பகையைத் தவிர்க்கும்.** |
| **பழிவாங்கும் எண்ணத்தைக்** கைவிடல். | மனதின் பாரம் இறங்கி **அமைதி** கிட்டும். |
| **பெரியோர் மொழி** கேட்டல். | **வாழ்வு நல்வழிப்படும்.** தவறுகள் **திருத்தப்படும்.** |
| பொய்யைத் தவிர்த்து **உண்மை பேசுதல்.** | **நேர்மை**யுடனும், **துணிவு**டனும் வாழலாம். |
| பிறருக்கு **உதவுதல்.** | **மனமகிழ்ச்சி**யும் **நட்பு**ணர்வும் ஏற்படும். |

# வெற்றிக்கு வழி குழுமம் & திறன்வளர் ஆசிரியர் மன்றம்

## 10ஆம் வகுப்பு மாதிரி பொதுத்தேர்வுக்கான விடைக்குறிப்பு 2023-2024

## தமிழ்

### பகுதி – V (மதிப்பெண்கள் - 24)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** $3 \times 8 = 24$

| வி.எண் | விடைகள் | மதிப்பெண் |
|---|---|---|
| 43. (அ) | **தமிழ்மொழியின் சொல் வளமும் தமிழ்நாட்டின் பொருள் வளமும்** **[உ - 1]**<br>❖ **முன்னுரை**<br>❖ **தமிழ் மொழியின் சொல்வளம்**<br>• **தாவரங்களின் அடிவகை :** தாள் - நெல், கேழ்வரகு; தண்டு - கீரை, வாழை ….<br>• **இலை வகை :** இலை - புளி, வேம்பு; தோகை - சோளம், கரும்பு …<br>• **கொழுந்து வகை :** துளிர் அல்லது தளிர் : நெல், புல்; குருத்து: சோளம், கரும்பு<br>• **பூவின் நிலைகள்** : அரும்பு - பூவின் தோற்ற நிலை; போது - பூ விரியத் தொடங்கும் நிலை<br>• **பிஞ்சு வகை :** வடு - மாம்பிஞ்சு, நுழாய் - இளம்பாக்கு …<br>❖ **தமிழ்நாட்டின் பொருள்வளம்** : தமிழ்நாடு பொருள் வளமுடையதென்பது, அதன் **விளைபொருள் வகைகளை** நோக்கினாலே விளங்கும்.<br>• உதாரணமாக, **கோதுமை**யில் - சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை போன்ற சில வகைகளே உண்டு.<br>• **தமிழ்நாட்டு நெல்** - செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை…<br>• **சம்பா** - சீரகச்சம்பா, சிறுமணிச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன.<br>• வரகு, குதிரைவாலி முதலிய **சிறுகூலங்கள்** தமிழ்நாட்டில் குறிப்பாக **தென்னாட்டில் மட்டுமே விளைகின்றன.**<br>❖ **முடிவுரை**<br>*(பொருத்தமாக விடை எழுதி இருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.)* | **8** |
| 43. (ஆ) | **எவரேனும் ஓர் அறிஞரின் வாழ்வில் நடந்த நிகழ்வுகள்** **[உ - 7]**<br>(வினாவிற்கு ஏற்ற விடையை உட்தலைப்புகளிட்டு எழுதியிருப்பின் முழு மதிப்பெண் தரவும்.) | **8** |
| 44. (அ) | **அன்னமய்யா - பசித்தவருக்கு உணவிடுதல்** **[விரி - 3]**<br>❖ முன்னுரை / ❖ அன்னமய்யாவின் விருந்தோம்பல்<br>❖ வெள்ளந்தி மனம் படைத்த கோபல்லபுரத்து அன்னமய்யா / ❖ வழிப்போக்கனின் பசியை போக்கியதால் அன்னமய்யாவிற்கு ஏற்பட்ட மனநிறைவு<br>❖ பசியால் வாடிய வழிப்போக்கன் / ❖ முடிவுரை<br>*(கதைப்பகுதியை ஒட்டி கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்.)* | **8** |
| 44. (ஆ) | **இராமானுசர் நாடகம் வெளிப்படுத்தும் மனிதநேயம்**<br>❖ முன்னுரை<br>❖ திருமந்திரத்தைக் கூறுவதற்கு இராமானுசரை பூரணர் திருவரங்கத்திற்கு வரச் சொல்லுதல்.<br>❖ கூரேசர், முதலியாண்டான் ஆகிய இருவரையும் இராமானுசர் அழைத்துச் செல்லுதல்.<br>❖ அவர்களைக் கண்ட பூரணர் கோபம் கொள்ளுதல்.<br>❖ இராமானுசர் பூரணரிடம் வேண்டுதல்<br>❖ பூரணர் நிபந்தனையுடன் திருமந்திரத்தை மூவருக்கும் கூறுதல்<br>❖ இராமானுசர் திருமந்திரத்தை மக்களுக்கு உரைத்தல்<br>❖ குருவின் கோபமும் ஆசியும்<br>❖ முடிவுரை **[விரி - 8]**<br>*(கதைப்பகுதியை ஒட்டி கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்.)* | **8** |
| 45. (அ) | **செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக்கலை** **[உ - 5]**<br>❖ முன்னுரை / ❖ பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள்<br>❖ தமிழின் இலக்கிய வளம் / ❖ பிறதுறைக் கருத்துகள்<br>❖ கல்வி மொழி / ❖ முடிவுரை<br>*(உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்.)* | **8** |
| 45. (ஆ) | **சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் பாதுகாப்பு** **(தயாரிக்கப்பட்ட வினா)** **[அ - 2]**<br>❖ முன்னுரை / ❖ புவி வெப்பமயமாதல்<br>❖ சுற்றுச்சூழல் அறிமுகம் / ❖ பாதுகாப்பு நடவடிக்கைகள்<br>❖ சூழல் மாசடைதல் / ❖ சுற்றுச்சூழல் பாதுகாப்பில் நம் கடமைகள்<br>❖ பாதிப்புகள் / ❖ முடிவுரை<br>*(உட்தலைப்புகளின் கீழ் கருத்துகள் எழுதப்பட்டிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்.)* | **8** |